# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025−ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 07−ஆம் நாள், திங்கட்கிழமை

## இ.ம.எண்.1/2023 இன் அ.வ.எண்.618/2004

## CNR No. TNSA13-000070-2004

1. சின்னபொண்ணு
2. செல்வகுமார்
3. ராமசாமி .. மனுதாரர்கள் /வாதிகள்

/எதிராக/

1. மணிமாறன்
2. கண்ணுசாமி
3. செல்லக்கொடி .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 04.04.2025−ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆறுமுகம் அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.தயாளன் அவர்கள் ஆஜராகியும், 4, 5 உத்தேசதரப்பினர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பாலஸ்ரீபதி அவர்கள் ஆஜராகியும், 6ம் உத்தேசதரப்பினர் தோன்றாதரப்பினராக ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவை தாவா சொத்தை செல்வி, ஆனந்த் மற்றும் அமுதலட்சுமி ஆகியோர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் அவர்களையும் இவ்வழக்கில் 4, 5, 6 பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி உரிமையியல்

நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2) மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்துள்ளனர்.

II. **மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**

மனுதாரர் மேற்படி தாவாவில் 2–ம் வாதி ஆவார். இம்மனுவை தனக்காகவும், 1, 3 மனுதாரர்கள்/ வாதிலுக்காகவும் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர தடை உத்திரவு கோரி தாவா தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும் தாவா சொத்து மனுதாரர்களுக்கு உரிமையானது என்றும், எதிர்மனுதாரர்கள் வேறு சர்வே எண்களில் கிரயம் பெற்றுவிட்டு மனுதாரர்களுக்கு சொந்தமான தாவா சொத்தில் அத்துமீறி இடையூறு செய்து உரிமை கொண்டாடி வருவதால் தாவா சொத்தை அளவீடு செய்ய ஐ.ஏ.531/2015 மனுவை தாக்கல் செய்து மேற்படி மனுவில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும் குறிபிட்டுள்ளார்.

மேலும் மேற்படி அறிக்கையில் செல்வி மற்றும் அவரது மகன் ஆனந்த் என்பவர்கள் தாவா சொத்தில் ஒரு பகுதியில் 0.0100.0 சதுர மீட்டர் அளவுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்து தார்சு வீடும், ஒரு அட்டை வீடும் கட்டியுள்ளார்கள். அதேபோன்று அமுதலட்சுமி என்பவர் தாவா சொத்தில் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்து சிமெண்ட் அட்டையை கொண்டு அவரது வீட்டின் முன்பு மனுதாரர்களுக்கு சொந்தமான தாவா சொத்தில் தாழ்வாரம் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும் எனவே மேற்படி மூவரையும் தாவாவில் 4, 5, 6 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி அளித்து உத்திரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

III. **1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :**

இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், பிரமாணப்பத்திரிக்கையில் உள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள்

ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் IA.No.531/2015–ல் ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனைகளை தெரிவித்துள்ளதாகவும், மேற்படி ஆட்சேபனைகளை இந்த பதிலுரையில் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை எதிர்மனுதாரர்கள் புறக்கணிக்கப்பதாகவும், தவறான ஆணையர் அறிக்கையை வைத்துக்கொண்டு தேவையில்லாத தரப்பினர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை காலதாமதப்படுத்த வேண்டியே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் புதிய தரப்பினர்கள் நீண்ட காலமாக அவர்களது சொந்த இடத்தில் வீடு கட்டி அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள். அவர்கள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிடுவது தவறானது. எனவே உத்தேசதரப்பினர்கள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

IV. <u>4, 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>

இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், பிரமாணப்பத்திரிக்கையில் உள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் 4ம் எதிர்மனுதாரருக்கு சேலம் மாவட்டம், பிற்பட்டோர் நல அலுவலரின் ந.க.ப.மு.50002/2011 (பிசி2) நாள் 16.12.2011, தனி தாசில்தார் ந.க.1432/2011 மனை எண் 157–ன் படி ஆத்தூர் தாலுக்கா (தற்போது தலைவாசல் வட்டம்) பெரியேரி கிராம சர்வே எண்.184/2A1 நம்பரில் 0.03 செண்ட் நிலம் மனை எண் 157 முருகேசன் மனைவி செல்வி என்பவருக்கு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்ட நிலம் என்றும், மேற்படி

அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தில்தான் 4ம் எதிர்மனுதாரர் அரசின் நிதி பெற்று பிரதமமந்திரி குடியிருப்புத்திட்டத்தின் கீழ் தொகுப்பு வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், 4ம் எதிர்மனுதாரர் ஒருபோதும் மனுதாரர்கள் / வாதியின் சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், அரசினால் அளந்து அடையாளம் காட்டப்பட்ட நிலத்தில் மட்டுமே அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், மனுதாரர் நீதிமன்றம் மூலம் அவரது சொத்துக்களை அளவீடு செய்வது பற்றி 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித முன் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்,

4ம் எதிர்மனுதாரருக்கு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அடையாளம் காட்டிய இடத்தில் அரசின் பிரதமமந்திரி குடியிருப்புத்திட்டத்தின் கீழ் தொகுப்பு வீடும் கட்டியுள்ளார். மேலும் 4ம் எதிர்மனுதாரருக்கு அரசு நிலம் ஒதுக்கீடு செய்வதற்கு முன் சுமார் 15 ஆண்டிற்கும் முன்பே சர்வே எண்.184/2A1–ல் கூரை வீடு கட்டி அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்ததாகவும், அவருடைய அனுபவ சுவாதீனத்தை கருத்தில் கொண்டே அரசினால் அளவீடு செய்யப்பட்டு மனை எண்.157 ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், மேற்படி மனையின் தென் பகுதியில் எதிர்கால தேவைக்கென அரசினால் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இடமும் அப்படியே உள்ளது என்றும் குறிபிட்டுள்ளார்.

மேற்படி விவரம் 4ம் எதிர்மனுதாரருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நில ஒப்படைவு ஆவணத்துடன் இணைக்கப்பட்ட வரைபடத்தில் மிக தெளிவாக தெரியும் என்றும், அரசினால் எதிர்கால தேவைக்கு என நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடத்தின் வடபகுதியில் உள்ள எதிர்மனுதாரரின் வீடு தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தவறாக மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். வருவாய் துறையினரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தை அதே வருவாய் துறையினரால் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று கூறுவது விந்தையானது. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பினரே இல்லாமல் செய்யப்பட்ட அளவீடு எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்றும், எனவே 4, 5 எதிர்மனுதாரர்கள்

இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

V. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

**மனுதாரர்கள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?**

VI. மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், தாவா சொத்தில் 4 முதல் 6 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியிருப்பதாகவும், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்த பின்னரே மேற்படி விவரம் தெரிய வந்தது எனவும், வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் 4 முதல் 6 பிரதிவாதிகளையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியமும், நியாயமும் என வாதிட்டார்.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தில்தான் 4, 5 எதிர்மனுதாரர்கள் தொகுப்பு வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், 4ம் எதிர்மனுதாரர் ஒருபோதும் மனுதாரரின் சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், இந்த எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித முன் அறிவிப்பும் கொடுக்காமல் மனுதாரர் தன்னிச்சையாக அளவீடு செய்தது ஏற்கத்தக்கதல்ல என்றும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றும், இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டியே இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யத்தக்கது எனவும் வாதிட்டார்.

இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வாதிகள்/மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களை பரிசீலனை செய்த போது தாவா சொத்தில் 4, 5, 6 எதிர்மனுதாரர்கள் வீடு கட்டியுள்ளதாக

தெரிய வருகிறது. மேலும் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஐ பரிசீலனை செய்த பொழுது சர்வே எண்.184/2A1–க்கு தான் 4 ம் பிரதிவாதி பெயரில் அரசாங்கத்தால் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடு கட்ட பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. மேற்படி இடத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், 4, 5 பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார்கள் என்றும் தெரிய வருகிறது. எனவே 4 முதல் 6 பிரதிவாதிகளை இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்காவிட்டால் வாதி அவர்களுக்கு எதிராக மற்றொரு வழக்கு தாக்கல் செய்ய நேரிடும் என்பதால் 4 முதல் 6 பிரதிவாதிகள் இவ்வழக்கின் அவசிய தரப்பினர்கள் என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாகும். 6 ம் உத்தேசதரப்பினரை பொறுத்தவரை தோன்றாத்தரப்பினர் என்பதால் அவருக்கு எதிராகவும் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

VII. **<u>தீர்வு :</u>**

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 07–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- D. Jansi Rani

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 16.12.2011 | சேலம் மாவட்டம் பிற்பட்டோர் நல அலுவலரின் பிற்பட்டோர் நலத்துறை பட்டா படிவம் | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 03.02.2021 | பிரதம மந்திரி குடியிருப்புத்திட்டம் (ஊரகம்) அனுமதி ஆணை | நகல் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் : இல்லை
மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

True copy

Sd/- D. Jansi Rani
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண்: 1/2023
அ.வ.எண்.618/2004
நாள் : 07.04.2025